கூட்டம் எண்.005/2022

பேர்ணாம்பட்டு நகராட்சி
வேலூர் மாவட்டம்
நாள்.27.07.2022.

<u>சாதாரணக் கூட்டம்</u>

பேர்ணாம்பட்டு நகர் மன்றத்தின் சாதாரணக் கூட்டம் 2022ம் ஆண்டு ஜீலை மாதம் 30ம் தேதி சனிக்கிழமை காலை 11.00 மணியளவில் பேர்ணாம்பட்டு நகர் மன்றக் கூட்டத்தில் தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெறும். அது சமயம் பின்வரும் பொருள்கள் குறித்து தீர்மானிக்கப்பட உள்ளதால் நகர்மன்ற துணைத் தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் வருகை தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

நகர்மன்ற தலைவர்,
பேர்ணாம்பட்டு நகராட்சி,
வேலூர் மாவட்டம்

பெறுநர்
நகரமன்ற துணைத் தலைவர் மற்றும் அனைத்து நகர்மன்ற உறுப்பினர்கள்,
பேர்ணாம்பட்டு நகராட்சி.

-----

**<u>30.06.2022ம் தேதி நகர்மன்றத்தின் சாதாரண கூட்டம் ஒத்திவைக்கப்பட்டதால், பொருள் எண்.1 முதல் பொருள் எண்.43 வரை உள்ள மன்ற பொருள்கள் மன்றத்தின் அனுமதிக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.</u>**

பொருள் எண்.44

பேர்ணாம்பட்டு நகராட்சி ஆணையாளர் அவர்களின் ஜீலை 2022ம் மாதத்திய நாட்குறிப்பு மன்றத்தின் அனுமதிக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

மன்றம் பதிவு செய்யலாம்.

ந.க.எண்.500/2022/சி1

தீர்மானம் எண்.86

அனுமதிக்கப்படுகிறது.

பொருள் எண்.45

பேர்ணாம்பட்டு நகராட்சி பொறியாளர் அவர்களின் ஜீலை 2022ம் மாதத்திய நாட்குறிப்பு மன்றத்தின் அனுமதிக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

மன்றம் பதிவு செய்யலாம்.

ந.க.எண்.500/2022/சி1

தீர்மானம் எண்.87

அனுமதிக்கப்படுகிறது.

பொருள் எண்.46

<u>நகர்மன்ற தலைவர் திருமதி.வெ.பிரேமா அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்.</u>

வார்டு எண்.12ல் உள்ள காமராஜ் நகரில் உள்ள இரண்டு தெருகளுக்கு சிமெண்ட சாலை மற்றும் கழிவு நீர் கால்வாய் அமைத்து தருமாறு கோரியுள்ள கடிதம் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

தீர்மானம் எண்.88

அனுமதிக்கப்படுகிறது.

பொருள் எண்.47

<u>நகர்மன்ற துணைத் தலைவர் திரு. ஆலியார் ஜீபேர் அஹ்மத் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்.</u>

பேர்ணாம்பட்டு நகராட்சியில் வார்டு மறுவரையறை செய்யப்பட்டதில் பெருவாரியான வார்டு எண்கள் மாற்றப்பட்டுள்ளது. மேலும் தற்பொழுது தெருக்களின் எண்ணிக்கை 493 ஆக உயர்ந்துள்ளது. புதிய தெருக்களின் பெயர் பலகை தெருக்களில் இன்னும் வைக்கப்படவில்லை. எனவே அனைத்து தெருக்களின் முகப்புகளில் வார்டு எண் மற்றும் தெருவின் பெயர் பலகை வைக்கவும், அனைத்து வீடுகளின் கதவுகளில் வரிவிதிப்பு எண். குடிநீர் கட்டண எண் மற்றும் கதவு எண்கள் பதியப்பட வேண்டும் என கோரியுள்ள கடிதம் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

தீர்மானம் எண்.89

அனுமதிக்கப்படுகிறது.

பொருள் எண்.48

<u>நகர்மன்ற துணைத் தலைவர் திரு. ஆலியார் ஜீபேர் அஹ்மத் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்.</u>

பேர்ணாம்பட்டு நகராட்சியில் பேருந்து நிலையம் முதல் நாலு கம்பம் வரை மக்கள் நெரிசல் அதிகமாக உள்ளதால் போக்குவரத்து மிகவும் கடுமையான நெரிசல் எற்படுகிறது. எனவே, நாலுகம்பம் முதல் பேருந்து நிலையம் வரை உள்ள Centre Median (நெடுஞ்சுவர்) அகற்றும்படி பொதுப்பணித் துறைக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்தக் கோரியுள்ள கடிதம் மன்றத்தின் பார்வைக்கு அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

தீர்மானம் எண்.90

அனுமதிக்கப்படுகிறது.

பொருள் எண்.49

<u>நகர்மன்ற துணைத் தலைவர் திரு. ஆலியார் ஜீபேர் அஹ்மத் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்.</u>

பேர்ணாம்பட்டு நகராட்சி 1996ஆம் ஆண்டு பேரூராட்சியாக உள்ள நிலையில் 21 வார்டுகளாக தரம் உயர்த்தப்பட்டது. அப்பொழுது வாக்காளர் 13500 மட்டுமே. இரண்டாம் நிலை நகராட்சியாக மாறிய பின்பு 2021ம் ஆண்டு வாக்காளர் கணக்கெடுப்பு 42000 ஆகும். ஆனால் வார்டு எண்ணிக்கை உயர்த்தப்படவில்லை. கடந்த உள்ளாட்சி தேர்தலில் ஒருசில வார்டுகளில் வாக்காளர் எண்ணிக்கை 3000 அதிகமாக உள்ளது. எனவே மாநில தேர்தல் அனைத்தும் மேற்கண்ட தகவல் மூலம் 36 வார்டுகளாக பேர்ணாம்பட்டு நகராட்சியை தரம் உயர்த்தும்படி கோரும் கடிதம் மன்றத்தின் பார்வைக்கு அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

தீர்மானம் எண்.91

அனுமதிக்கப்படுகிறது.

பொருள் எண்.50

<u>நகர்மன்ற உறுப்பினர்களால் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்.</u>

பேர்ணாம்பட்டு நகராட்சிக்குட்பட்ட அம்மா உணவகத்தில் விற்பனை மிகவும் குறைவாக இருப்பதாலும் பணியாளர்கள் சரிவர பணிக்கு வராததாலும் எற்கனவே சட்டமன்ற உறுப்பினர் திருமதி.வி.அமலு அவர்கள் ஆய்வின் போது முறைகேடு

கண்டுபிடிக்கப்பட்டது. கடந்த வாரம் ஆணையாளர் அவர்கள் ஆய்வு செய்த போது பணிக்கு வராத நபர்கள் 5 பேர் தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டதாக செய்தித்தாளில் செய்திகள் பிரசுரம் ஆனது. எனவே அம்மா உணவகத்தில் தினம் 6 பேர் வீதம் பணி மேற்கொள்ளவும் அம்மா உணவகத்தை தொடர்ந்து கண்காணிப்பு குழு அமைக்கவும் கோரும் அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கு அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

தீர்மானம் எண்.92

அனுமதிக்கப்படுகிறது.

பொருள் எண்.51

<u>2வது வார்டு உறுப்பினர் திருமதி.பி.ஜானகி அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்.</u>

1. 2வது வார்டு அன்னை நகர் அரசு அங்கீகாரம் பெற்ற வீட்டு மனை பொது இடத்தில் விளையாட்டு மைதானம் மற்றும் ஒகெனக்கல் கூட்டு குடிநீர் டேங்கு உள்ளது. ஆனால் இதுநாள் வரை சாலைகள் கழிவுநீர் கால்வாய் இல்லாத காரணத்தால் பொதுமக்களுக்கு சாலைகள் மற்றும் கழிவுநீர் கால்வாய் அமைத்து தருமாறு கோரியுள்ள கடிதம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.
2. அண்ணா நகர் பொது இடத்தில் ஊரின் பொது காரியங்கள் செய்துக் கொள்ள கோரியுள்ள கடிதம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

தீர்மானம் எண்.93

1–வளர்ச்சி நிவாரண நிதியிலிருந்து பணிகள் மேற்கொள்ளஅனுமதிக்கப்படுகிறது.

2– அரசு அனுமதி பெறலாம்.

பொருள் எண்.52

<u>3வது வார்டு உறுப்பினர் திருமதி.நாகஜோதி அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்.</u>

1. 3வது வார்டு அண்ணா நகர் பகுதியில் தேவாலயம் தெரு மண் சாலையாக உள்ளதால் புதியதாக சிமெண்ட சாலை, கழிவுநீர் கால்வாய் மற்றும் குடிநீர் விநியோக பைப்லைன் அமைத்து தருமாறு கோரியுள்ள கடிதம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.
2. 3வது வார்டு கே.கே.நகர் வீரப்பன் வீதி, தினகரன் வீதி, எம்.ஜீ.ஆர்.நகரில் குணசேகரன் வீதி மற்றும் அரசு மேல்நிலைப்பள்ளிக்கு எதிரில் போன்ற இடங்களில் புதியதாக கழிவுநீர் கால்வாய் அமைத்து தருமாறு கோரியுள்ள கடிதம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

தீர்மானம் எண்.94

1, 2 வளர்ச்சி நிவாரண நிதியிலிருந்து பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கப்படுகிறது.

பொருள் எண்.53

<u>4வது வார்டு உறுப்பினர் திருமதி.எஸ்.சுல்தானா அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்.</u>

1. 4வது வார்டு முகமதலி வீதி–2ல் கழிவுநீர் கல்லை பாலம் அமைத்து தருமாறு கோரியுள்ள கடிதம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.
2. 4வது வார்டு முகமதலி வீதி–1ல் சுமார் 400மீட்டர் சிமெண்ட் சாலை மற்றும் கழிவுநீர் கால்வாய் அமைத்து தருமாறு கோரியுள்ள கடிதம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.
3. 4வது வார்டு முகமதலி வீதி–2ல் 300 மீட்டர் கழிவுநீர் கால்வாய் அமைத்து தருமாறு கோரியுள்ள கடிதம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

தீர்மானம் எண்.95

1, 2, 3 வளர்ச்சி நிவாரண நிதியிலிருந்து பணிகள் மேற்கொள்ள அனுமதிக்கப்படுகிறது.

பொருள் எண்.54

<u>7வது வார்டு உறுப்பினர் திருமதி.எ.எச்.ஷாகிராபேகம் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்.</u>

1. 7வது வார்டு ரகமானியா வீதி மற்றும் டிப்புசா வீதி கழிவுநீர் கால்வாய் பழுதடைந்துள்ளது. பழுதினை சரி செய்து தரும்படியும் மேலும் சிறு சிறு பழுதுகளை சரி செய்ய ஆகும் தோராய செலவினத் தொகை ரூ.30,000/- (ரூபாய் முப்பதாயிரம் மட்டும்) மதிப்பீட்டில் தீர்மானம் நிறைவேற்றும்படி கோரியுள்ள கடிதம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.
2. 7வது வார்டு ரகமானியா வீதி, டிப்புசா வீதி, லால்மஜித் வீதியில் குடிநீர் தாழ்வான பகுதிக்கு செல்வதால் 6 இன்ச் கேட் வால்வு அமைக்கவும் மற்றும் தெருக்களில் உள்ள சாலை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் கழிவுநீர் கால்வாய் சீரமைக்கவும் புதியதாக கட்டுவதற்கு மன்ற தீர்மானம் நிறைவேற்றும்படி கோரியுள்ள கடிதம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

தீர்மானம் எண்.96

1, 2 பொறியாளர் அறிவிக்கை வைக்கவும்.

பொருள் எண்.55

<u>11வது வார்டு உறுப்பினர் திரு.டி.அப்துல் ஜமில் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்.</u>

1. 11வது வார்டில் மெயின் பைப்பில் உள்ள அடைப்புகளை அகற்றி ரஹமதாபாத்-2, 4 மற்றும் 5வது வீதிகளில் 4 இன்ச் பைப்புள் அமைத்து தருமாறு கோரியுள்ள கடிதம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.
2. 11வது வார்டு ரஹமதாபாத்-1வது வீதியில் 2 மின்கம்பங்கள், 2வது வீதியில் 2 மின்கம்பங்கள் 3வது வீதியில் 1 மின்கம்பம் 4வது வீதியில் 2 மின்கம்பங்கள் ஆக மொத்தம் 7 ஏழு மின்கம்பங்களில் மின்விளக்குகள் அமைத்து தருமாறு கோரியுள்ள கடிதம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.
3. 11வது வார்டு ரஹமதாபாத் மசுதி அருகில் ஒரு உயர்மின்கோபுர விளக்கு அமைத்து தருமாறு கோரியுள்ள கடிதம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

தீர்மானம் எண்.97

1- பொறியாளர் அறிவிக்கை வைக்கவும்.

2, 3 எலக்ட்ரிஷியன் அறிவிக்கை வைக்கவும்.

பொருள் எண்.56

<u>13வது வார்டு உறுப்பினர் திரு.சி.அஹ்மத் பாஷா அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்.</u>

1. 13வது வார்டு சின்ன மஜீத் வீதியில் புதியதாக சின்டெக்ஸ் அமைத்து தருமாறு கோருகிறார்.
2. 13வது வார்டு சின்ன மஜித் வீதியில் புதியதாக 2 மின்கம்பங்கள், இனாம்தார் வீதியில் 1 மின்கம்பம் மற்றும் எம்.ஆர்.வீதியில் 1 மின்கம்பம் அமைத்து மின்விளக்குகள் அமைத்து தருமாறு கோரியுள்ள கடிதம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.
3. 13வது வார்டு சின்ன மஜித் வீதியில் 3 கல்வெட்டு, இனாம்தார் வீதியில் ஒரு கல்வெட்டு மற்றும் காசிம் வீதியில் கல்வெட்டு உடைந்துள்ளதால் போக்குவரத்திற்கும், பொது மக்கள் செல்வதற்கும் மிகவும் சிரமாக உள்ளதால் கல்வெட்டு அமைத்து தருமாறு கோரியுள்ள கடிதம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

தீர்மானம் எண்.98

1, 3 வளர்ச்சி நிவாரண நிதியிலிருந்து பணிகள் மேற்கொள்ள அனுமதிக்கப்படுகிறது.

2-எலக்ட்ரிஷியன் அறிவிக்கை வைக்கவும்.

பொருள் எண்.57

<u>15வது வார்டு உறுப்பினர் திருமதி.எஸ்.நூரேசபா அர்ஷத் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்.</u>

1. 15வது வார்டு பெரியமஜித் வீதி, நுஸ்ரத் வீதி, பூந்தோட்ட வீதி, முல்லா வீதி பஜார் வீதி (ஓ.டி.முன்னா கடை அருகில்) ஆகிய விதிகளில் உள்ள பழுதடைந்துள்ள பழைய கல்வெட்டுகளை (தரை பாலம்) அகற்றி புதிய கல்வெட்டுகளை அமைத்து தருமாறு கோருகிறார்.
2. பஜார் வீதியில் உள்ள கால்வாயின் மீது அமைந்துள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி திறந்தவெளி கால்வாயினை அமைத்து தருமாறு கோரியுள்ள கடிதம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.
3. மதிப்பிற்குரிய தலைவர் மற்றும் துணைத் தலைவர் அவர்களுக்கு நகர்மன்ற தேர்தலில் நாம் கொடுத்த வாக்குறுதியின்படி பேர்ணாம்பட்டு பழைய பேருந்து நிலையத்தினை விரிவாக்கம் செய்து அதிநவீன புதிய பேருந்து நிலையமாக மாற்றம் செய்ய வேண்டும். மேலும் இந்த தீர்மானத்தை நகர்மன்றம் உடனடியாக நிறைவேண்டும். பேர்ணாம்பட்டு நகர மக்களின் பெரும்பான்மையினோர் எண்ணங்களை நிறைவேற்றி தருமாறு கோரியுள்ள கடிதம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

தீர்மானம் எண்.99

1, 2 வளர்ச்சி நிவாரண நிதியிலிருந்து பணிகள் மேற்கொள்ள அனுமதிக்கப்படுகிறது.

2– அனுமதிக்கப்படுகிறது.

பொருள் எண்.58

<u>17வது வார்டு உறுப்பினர் திருமதி.வெ.வரலட்சுமி அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்.</u>

1. 17வது வார்டு சோழன் வீதி (நுலகம் அருகில்) மற்றும் பாண்டியன் வீதி–1(ஓம் சக்தி கோவில் அருகில்) ஆகிய வீதிகளில் பழுதடைந்துள்ள சிறுபாலங்களை புதியதாக அமைத்து தருமாறு கோரியுள்ள கடிதம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.
2. 17வது வார்டு பூங்கா வீதியில் பழுதடைந்துள்ள சாலை மற்றும் கழிவு நீர் கால்வாயினை சரி செய்து தருமாறு கோரியுள்ள கடிதம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

தீர்மானம் எண்.100

1, 2 வளர்ச்சி நிவாரண நிதியிலிருந்து பணிகள் மேற்கொள்ள அனுமதிக்கப்படுகிறது.

பொருள் எண்.59

<u>20வது வார்டு உறுப்பினர் திருமதி.எஸ்.இந்திராகாந்தி அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்.</u>

1. 20வது வார்டில் பழுதடைந்துள்ள சின்டெக்ஸ் டேங்குகளை புதியதாக அமைத்து தருமாறு கோரியுள்ள கடிதம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.
2. 20வது வார்டு முழுவதும் பழுதடைந்துள்ள சிமெண்ட சாலை மற்றும் கழிவுநீர் கால்வாய்களை புதியதாக அமைத்து தருமாறு கோரியுள்ள கடிதம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.
3. பேர்ணாம்பட்டு பேருந்து நிலையம் மற்றும் சாலைப்பேட்டையில் உள்ள அண்ணல் அம்பேத்கர் சிலைகளுக்கு வண்ணம் பூசும்படி கோரியுள்ள கடிதம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

தீர்மானம் எண்.101

1, 3 அனுமதிக்கப்படுகிறது.

2 – வளர்ச்சி நிவாரண நிதியிலிருந்து பணிகள் மேற்கொள்ள அனுமதிக்கப்படுகிறது.

பொருள் எண்.60

<u>21வது வார்டு உறுப்பினர் திருமதி.நஜீஹா அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்.</u>

1) 21வது வார்டு ரஷிதாபாத்–1வது தெருவில் கழிவுநீர் கால்வாய் மிகவும் மோசமான நிலையில் உடைந்து கழிவுநீர் அனைத்தும் வீடுகளில் செல்வதால் புதியதாக கழிவுநீர் கால்வாய் அமைத்து தருமாறு கோரியுள்ள கடிதம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.
2) பள்ளிவாசல் அருகில் கல்வெட்டு கால்வாய் (ரஷிதாபாத் மஜீத் அருகில்) எச்.ஏ.கே.வீதியில் கல்வெட்டு கால்வாய், சித்திக் நகரில் 2 கல்வெட்டு கால்வாய் (ஜாக்கீர் மஜித் அருகில்) ரஷிதாபாத் முதல் தெருவில் கல்வெட்டு கால்வாய் (தண்ணீர் டேங்க் அருகில் நிசார் பாய் வீடு அருகில்) அமைத்து தருமாறு கோரியுள்ள கடிதம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

தீர்மானம் எண்.102

1, 2 வளர்ச்சி நிவாரண நிதியிலிருந்து பணிகள் மேற்கொள்ள அனுமதிக்கப்படுகிறது.

பொருள் எண்.61

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.17.01.1994 அரசாணை எண்.62,ன் படியும், மற்றும் நகராட்சிகள் சிட்டம் 1920 விதி எண்.629எ–வில் கண்ட திருத்தங்களின்படியும், தணிக்கையில் பணியாளர்களின் உண்மைச் செலவினங்களில் 50% தொகை ரூ.54,228/–ஐ "0070–Other Administrative service 60 – other service 110 Fee for Government Audit – AA fee for Government Audit – DPC code –0070–60–110– AA – 0009" என்ற அரசுத் தலைப்பில் செலுத்துமாறு 2020–2021ம் ஆண்டு தணிக்கை அறிக்கையில் அறிவுறுத்தி பத்தி எண்.77ல் எழுப்பப்பட்டுள்ளது. தணிக்கை கட்டணம் செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. அனுமதிக்கலாம்.
2. ரூ.54,228/–ஐ வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 236/2019/சி1

தீர்மானம் எண்.103

அனுமதிக்கப்படுகிறது.

பொருள் எண்.62

பேர்ணாம்பட்டுநகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் உள்ள LCV வாகனம் TN 23 CW 5825 எண்ணுள்ள வண்டியில் இன்ஜின் பழுதுகள் சரி செய்து சர்வீஸ் செய்ய அவசர அவசியம் கருதி உள்ளூர் நிறுவனத்தின் மூலம் 15.06.2022 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விவரம் கீழ்வருமாறு.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1. | ராஜி டீசல் ஒர்க்ஸ் | ரூ.11800/– |
| 2. | ஸ்ரீ பழனி ஆட்டோ மொபைல்ஸ் | ரூ.12800/– |
| 3. | ப்ரிதீப் ஆட்டோ ஒர்க்ஸ் | ரூ.14100/– |

அலுவலக குறிப்பு:

1.வரிசை எண்.1ல் காணும் நிறுவனம் குறைவான மதிப்பீடு வழங்கிய ராஜி டீசல் ஒர்க்ஸ் என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளி ஏற்று மன்றத்தின் ஒப்புதல் எதிர் நோக்கி வேலை உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

2.அவசர அவசியம் கருதி வேலை மேற்கொண்டமைக்கும் செலவின தொகை வழங்கியதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.866/2022/எச்1

தீர்மானம் எண்.104

அனுமதிக்கப்படுகிறது.

பொருள் எண்.63

பேர்ணாம்பட்டுநகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் உள்ள டிராக்டர் வாகனம் TN 23 M 7038 எண்ணுள்ள வண்டியில் பேட்ரி பழுதடைந்து விட்டதற்கு அவசர அவசியம் கருதி அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தின் மூலம் 15.06.2022 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விவரம் கீழ்வருமாறு.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1. | வேலூர் பேட்ரி சென்டர் | ரூ.8400/– |
| 2. | வேலூர் பேட்ரி கேர் | ரூ.8750/– |
| 3. | தி ஆட்டோ டீசல் சர்வீஸ் | ரூ.8700/– |

அலுவலக குறிப்பு:

மேற்கண்ட விவரத்தில் வரிசை எண்.1ல் காணும் நிறுவனம் குறைவான மதிப்பீடு வழங்கிய வேலூர் பேட்ரி சென்டர் என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளி ஏற்று மன்றத்தின் ஒப்புதல் எதிர் நோக்கி வேலை உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதிக்கலாம். அவசர அவசியம் கருதி வேலை மேற்கொண்டமைக்கும் செலவின தொகை வழங்கியதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.867/2022/எச்1

தீர்மானம் எண்.105

அனுமதிக்கப்படுகிறது.

பொருள் எண்.64

பேர்ணாம்பட்டுநகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் உள்ள LCV வாகனம் TN 23 CW 5833 எண்ணுள்ள வண்டியில் இன்ஜின் பழுது மற்றும் ஹைட்ராலிக் பழுதுகள் சரி செய்து சர்வீஸ் செய்ய அவசர அவசியம் கருதி உள்ளூர் நிறுவனத்தின் மூலம் 22.06.2022 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விவரம் கீழ்வருமாறு.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1. | ராஜி டீசல் ஒர்க்ஸ் | ரூ.14500/– |
| 2. | ஸ்ரீபழனி ஆட்டோ மொபைல்ஸ் | ரூ.15450/– |
| 3. | ப்ரிதீப் ஆட்டோ ஒர்க்ஸ் | ரூ.17400/– |

அலுவலக குறிப்பு:

வரிசை எண்.1ல் காணும் நிறுவனம் குறைவான மதிப்பீடு வழங்கிய ராஜி டீசல் ஒர்க்ஸ் என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளி ஏற்று மன்றத்தின் ஒப்புதல் எதிர் நோக்கி வேலை உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

அவசர அவசியம் கருதி வேலை மேற்கொண்டமைக்கும் செலவின தொகை வழங்கியதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.892/2022/எச்1

தீர்மானம் எண்.106

அனுமதிக்கப்படுகிறது.

பொருள் எண்.65

பேர்ணாம்பட்டு நகராட்சி நகர் பகுதிகளுக்கு 24x7 என்ற முறையில் குடிநீர் வழங்க ஏதுவாக திட்ட பிரேரணைகள் தயாரிக்கப்படுகிறது. இதில் நகருக்கு குடிநீர் ஆதாரத்தை அபிவிருத்தி செய்யும் பொருட்டு மலட்டாற்றில் மிசிகம் பகுதியில் புதியதாக 3 நீரை உறிஞ்சி கிணறுகளை அமைக்க புவியியலாளரை (Geologist) பயன்படுத்தித இடம் தேர்வு செய்வதற்கு ஆகும் செலவினம் ரூ.5,000/–க்கு உரிய அனுமதியும் இப்பணியை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் பரிசோதனை மையம் வேலூர் புவியியலாளரை பணியமர்த்தி பணி செய்துக் கொள்ள அனுமதிக்காக.

அலுவலக குறிப்பு:

1. பணியின் அவசர அவசியம் கருதி மன்றம்அனுமதி வழங்கலாம்.
2. இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.
3. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் பரிசோதனை மையம், வேலூர் புவியியலாளரை பணியமர்த்தி பணி செய்துக் கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.706/2022/இ1

தீர்மானம் எண்.107

அனுமதிக்கப்படுகிறது.

பொருள் எண்.66

தமிழ்நாடு நகரியியல் பயிற்சி நிறுவனம் கோயம்புத்தூர் அவர்களின் கடிதம்ந.க.எண்.323/2019/அ3, நாள்.19.07.2022ம் தேதிய கடிதத்தின்படி, இந்நகராட்சியில் தட்டச்சராக பணிபுரியும் திருமதி.ம.தனலட்சுமி என்பவருக்கு பெண் அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் பணி நீக்கத்தை நிர்வாகித்தல் மற்றும் இரட்டை வேடத்தில் வளர்த்தல் பங்கேற்பாளர்களை பிரதி நிதித்துவம் பயிற்சி 27.07.2022 முதல் 29.07.2022 வரை நடைபெறும் பயிற்சியில் பங்கேற்கவும் அதற்கான உணவு மற்றும் தங்கும் வசதிகளுக்கான கட்டணம் ஒருநபருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.1000/- வீதம் 3 நாட்களுக்கு ரூ.3,000/- தமிழ்நாடு நகரியியல் பயிற்சி நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1) அனுமதிக்கலாம்.
2) அவசர அவசியம் கருதி நகர்மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.804/2017/சி1

தீர்மானம் எண்.108

அனுமதிக்கப்படுகிறது.

பொருள் எண்.67

இந்நகராட்சியின் 2020-21ம் ஆண்டுக்கான வருவாய் நிதி மற்றும் குடிநீர் நிதி ஆகிய இரண்டு நிதிகளின் கணக்குகளை UTIS இணைய தளத்தில் தயார் செய்து தணிக்கை அலுவலர்களால் தணிக்கை முடிக்கப்பட்ட, 2020-21ம் ஆண்டுக்கான தணிக்கை அறிக்கையினை ஆறு நகல்கள் பிரிண்ட் எடுத்து பைண்டிங் செய்து வேலூர் உள்ளாட்சி நிதி தணிக்கை அலுவலகம், சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகம் மற்றும் வேலூர் நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகம் போன்ற அலுவலகங்களில் தணிக்கை அறிக்கையினை சமர்ப்பிக்க வேண்டியுள்ளதால், ஆறு நகல்கள் பிரிண்ட் எடுத்து பைண்டிங் செய்ய ஆகும் தோராய செலவின தொகை ரூ.20,000/-த்திற்கு (ரூபாய் இருபது ஆயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) ரூ.20,000/- (ரூபாய் இருபது ஆயிரம் மட்டும்) வருவாய் நிதியிலிருந்து செலவு மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.765/2022/சி1

தீர்மானம் எண்.109

அனுமதிக்கப்படுகிறது.

பொருள் எண்.68

இந்நகராட்சிக்கு புதியதாக மூன்று ஈப்பு வாகனங்கள் வாங்குவதற்கு உரிய நிர்வாக அனுமதி வழுங்ககோரி நகராட்சி நிர்வாக இயக்குநர் ,சென்னை அவர்களுக்கு இவ்வலுவலக கடித ந.க.எண்.169/2022/இ1 நாள்.04.04.2022ல் கடிதம் அனுப்பப்பட்டதை தொடர்ந்து நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.11753/2022/எம்3 நாள்.10.05.2022 ல் உரிய நிர்வாக அனுமதி வழுங்கப்பட்டது. மேலும் புதிய ஈப்பு வாகனங்கள் வாங்குவதற்கு கீழ்க்கண்டவாறு பில்பட்டியல் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | வாகன விவரம் | பில் தொகை ரூ |
|---|---|---|
| 1 | MAHINDRA SCORPIO S11 2.2mHawk | 16,29,119/- |
| 2 | MAHINDRA BOLERO B6(O) BS-VI | 9,18,373/- |
| 3 | MAHINDRA BOLERO B6(O) BS-VI | 9,18,373/- |
| | மொத்தம் | 34,65,865/- |

மேற்படி தொகையினை இந்நகராட்சியின் 2022-2023ம் நிதியாண்டின் பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.169/2022/இ1

தீர்மானம் எண்.110

அனுமதிக்கப்படுகிறது.

பொருள் எண்.69

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.01 முதல் 21 வரையிலான பகுதிகளில் உள்ள சேதமடைந்த சின்டெக்ஸ் டேங்க் மற்றும் அதற்கான பைப்லைன்களை அகற்றி புதியதாக சின்டெக்ஸ் டேங்குகள் மற்றும் அதற்கான பைப்லைன்கள் அமைப்பதற்கு மதிப்பீடு தொகை ரூ.3.50 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது, இச்செலவினத்தினை நகராட்சியின் 2022-2023ம் நிதியாண்டின் பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண். 937/2022/இ1

தீர்மானம் எண்.111

அனுமதிக்கப்படுகிறது.

பொருள் எண்.70

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட புது வீதி-1, குல்ஜார் வீதி-3, சஞ்சீவீ வீதி,கெங்கையம்மன் கோயில் வீதி, வீராசாமி வீதி-2 எண்ணிக்கை, கோவில் வீதி, சித்திக் நகர்-2 எண்ணிக்கை, பழைய ஆம்பூர் ரோடு-2 எண்ணிக்கை, பாகர் உசேன் வீதி-1 எண்ணிக்கை, சாலாப்பேட்டை-4 எண்ணிக்கை ஆகிய பகுதிகளில் சேதமடைந்த சிறுபாலங்களை சீரமைக்க மதிப்பீடு தொகை ரூ. 9.90 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. இச்செலவினத்தை நகராட்சியின் 2022-2023ம் நிதியாண்டின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண். 936/2022/இ1

தீர்மானம் எண்.112

அனுமதிக்கப்படுகிறது.

பொருள் எண்.71

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட சாலாப்பேட்டை-2 எண்ணிக்கை, மதர்ஸா இஸ்லாமியா வீதி -2-1 எண்ணிக்கை, எர்த்தாங்கல் ஹகீம் வீதி-1 எண்ணிக்கை, திராமதி ஷாப் வீதி -2 மற்றும் 3 - 2 எண்ணிக்கை, பெரிய மஜித் வீதி ,முல்லா வீதி, தாஹிர் வீதி,

அஜிஜியா வீதி, காசிம் வீதி, முருகர் கோயில் வீதி–2 எண்ணிக்கை, பூந்தோட்ட வீதி – 2 எண்ணிக்கை ஆகிய பகுதிகளில் சேதமடைந்த சிறுபாலங்களை சீரமைக்க மதிப்பீடு தொகை ரூ.9.90 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது.இச்செலவினத்தை நகராட்சியின் 2022–2023ம் நிதியாண்டின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :</u> மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண். 936/2022/இ1

தீர்மானம் எண்.113

அனுமதிக்கப்படுகிறது.

பொருள் எண்.72

இந்நகராட்சியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2022–23–ன் கீழ் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.10 ஆயக்கார வீதியில் புதியதாக நவீன எரிவாயு தகன மேடை அமைத்திட அரசாணை (நிலை) எண்: 88–நநி(ம)குவ (நநி) துறை நாள்: 17.06.2022–ன்படி ரூ. 146.00 லட்சத்திற்கு செய்ய நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டது மேற்படி பணிகளுக்கு 15.07.2022 அன்று இருமுறை உரைகளில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது வரப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகளில் ஒப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப தகுதியினை ஆராய்ந்து 21.07.2022 அன்று தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்களின் விலைப்பட்டியலை (PRICE BID) திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியலின் விவரம் பின்வருமாறு.

| வ. எண்; | பணியின் விவரம் | திரு. R. சுரேஷ்மணி | என் எஸ் கன்ஸ்டிரக்ஷன் |
|---|---|---|---|
| 1 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.10 ஆயக்கார வீதியில் புதியதாக நவீன எரிவாயு தகன மேடை அமைத்தல் | 3.01% மதிப்பீட்டை விட குறைவு | 1.99% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்படி பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக அளித்துள்ள ஒப்பந்த்தாரர் திரு. R. சுரேஷ்மணி ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணிஉத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

<u>அலுவலக குறிப்பு</u>

திட்டப் பணியில் அவசர அவசியம் கருதி திரு. ஆர். சுரேஷ்மணி என்பவரது ஒப்பந்தப் புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்கலாம்.

ந.க.எண்:இ1/603/2021

தீர்மானம் எண்.114

அனுமதிக்கப்படுகிறது.

பொருள் எண்.73

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.01 முதல் 21 வரையிலான பகுதிகளில் உள்ள சேதமடைந்த 90mm பைப்லைன்களை அகற்றி புதியதாக சின்டெக்ஸ் டேங்குகள் மற்றும் அதற்கான பைப்லைன்கள் அமைப்பதற்கு மதிப்பீடு தொகை ரூ.3.50 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது, இச்செலவினத்தினை நகராட்சியின் 2022–2023ம் நிதியாண்டின் பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u> மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண். 935 /2022/இ1

தீர்மானம் எண்.115

அனுமதிக்கப்படுகிறது.

பொருள் எண்.74

பேர்ணாம்பட்டு நகராட்சி பகுதியில் 15வது மத்திய நிதிக்குழு திட்டத்தின் கீழ் ரூ. 137.00 இலட்சம் மதிப்பீட்டிலான கீழ்க்காணும் பணிகளுக்கு திட்ட பிரேரணை தயார் செய்து நகராட்சி நிர்வாக இயக்குனர், சென்னை அவர்களிடம் நிர்வாக அனுமதி பெற வேண்டி கருத்துரு அனுப்ப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது,

| வ.எண் | வேலையின் விவரம் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| | கட்டிய மானியம் –திடக்கழிவு மேலாண்மை 50%–ரூ.41.00 இலட்சம் | |
| 1 | பாப் கேட் சிறிய எஸ்கவேட்டர் வாங்கும் பணி | 28.00 |
| 2 | 100லி கொள்ள்ளவு கொண்ட குப்பைத் தொட்டிகள் வாங்கும் பணி | 4.50 |
| 3 | சிவராஜ் நகர்,சவுக் ரோடு–4,அரவட்லா ரோட,பழைய ஆம்பூர் ரோடு,பூங்கா வீதி ஆகிய பகுதிகளில் உள்ள சமுதாய கழிப்பிடங்களில் பராமரிப்பு மற்றும் பழுதுபார்க்கும் பணி | 8.50 |
| | கட்டிய மானியம் –குடிநீர் வழங்கல் பணி 50%–ரூ.41.00 இலட்சம் | |
| 4 | நகராட்சி பகுதிகளில் 18 எண்ணிக்கையிலான 2 HP சிறுமின் விசை மோட்டார்கள் மற்றும் உதிரிபாகங்கள் உடன் ஆழ்துளை கிணறுகளில் பொருத்தும் பணி | 9.70 |
| 5 | நகராட்சி பகுதிகளில் சேதமடைந்துள்ள 90MM பைப்லைன்கள் மாற்றி அமைக்கும் பணி | 9.90 |
| 6 | குல்ஜார் வீதி மேல்நிலை நீர் தேக்க தொட்டியில் 12.5HP மோட்டார் அமைக்கும் பணி | 5.50 |
| 7 | குல்ஜார் வீதி மேல்நிலை நீர் தேக்க தொட்டியில் 12.5HP (Stand By) மோட்டார் அமைக்கும் பணி | 5.50 |
| 8 | குல்ஜார் வீதி மேல்நிலை நீர் தேக்க தொட்டியில் 7.5HP 2எண்ணிக்கை மோட்டார் அமைக்கும் பணி | 4.50 |
| 9 | எருக்கம்பட்டு நீரேற்றும் நிலையத்தில் 7.5HP 2எண்ணிக்கை மோட்டார் மற்றும் DI பைப்கள் அமைக்கும் பணி | 5.90 |
| | மொத்தம் | 82.00 |
| | கட்டிடா மானியம் 50% | |
| 1 | பாண்டியன் வீதி–3 அம்மா உணவகம் உள்ள சாலையில் புதியதாக மழைநீர் வடிகாலுடன் கூடிய பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணி | 6.00 |
| 2 | பாண்டியன் வீதி–3 தபால் நிலையம் உள்ள சாலையில் புதியதாக மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | 9.50 |
| 3 | ரஹமதாபாத்–1ல் புதியதாக மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | 4.10 |
| 4 | எம்.ஜி.ஆர் நகர் –1 எண்ணிக்கை , கே.கே நகர் –3 எண்ணிக்கை ,ரஹமதாபாத்–2 எண்ணிக்கை, பிலால் மஜித் தெரு–1 எண்ணிக்கை ,முருகர் கோயில் தெரு–1எண்ணிக்கை,தோப்பு வீதி–1 எண்ணிக்கை, குல்ஜார் வீதி–2ல்–1 எண்ணிக்கை,ஆமினா தெரு–1எண்ணிக்கை , மற்றும் காமராஜர் நகர்–1 எண்ணிக்கை ஆகிய பகுதிகளில் பழுதடைந்துள்ள சிறுபாலங்கள் புதியதாக மாற்றி அமைக்கும் பணி | 9.90 |

| | | |
|---|---|---|
| 5 | பேர்ணாம்பட்டு நகராட்சியில் 250 லி சுத்திகரிப்பு திறன் கொண்ட குடிநீர் சுத்திகரிப்பு பிளான்ட் அமைக்கும் பணி | 1.50 |
| 6 | உஸ்மான் தெரு–1 எண்ணிக்கை,காமராஜ் நகர்–1 எண்ணிக்கை,நியமத் வீதி–1 எண்ணிக்கை,ரஷிதாபாத்–1 எண்ணிக்கை,எர்த்தாங்கல் ஹக்கிம் வீதி–1 எண்ணிக்கை, மற்றும் தோப்பு வீதி–1எண்ணிக்கை ஆகிய பகுதிகளில் பழுதடைந்துள்ள சிறுபாலங்கள் புதியதாக மாற்றி அமைக்கும் பணி | 5.40 |
| 7 | நகராட்சி பகுதிக்களில் அமைந்துள்ள ஏழு எண்ணிக்கையிலான உயர் மின் கோபுரங்களில் புதியதாக 150 வாட்ஸ் எல்.இ.டி விளக்குகள் உதிரி பாகங்கள் பொருத்தும் பணி | 9.90 |
| 8 | நகராட்சி பகுதியில் அமையபெற்றுள்ள பிரதான நீர் உந்து பைப்லைன்கள்,பகிர்மான பைப்லைன்கள் மற்றும் வால்வுகளில் ஏற்படும் பழுதுகளை சரிபார்த்து பராமரிக்கும் பணி | 8.80 |
| | மொத்தம் | 55.00 |

<u>அலுவலக குறிப்பு :</u> மன்றம் பதியலாம்

ந.க.எண். 842/2022/இ1

தீர்மானம் எண்.116

பதிவு செய்யப்படுகிறது.

பொருள் எண்.75

பேர்ணாம்பட்டு நகராட்சி தலைமை நீரேற்றும் நிலையத்தில் 15 வது மத்திய நிதி குழு 2020–21–ன் கீழ் மேற்கொள்ளபடவுள்ள கீழ் குறிப்பிட்டுள்ள பணிகளுக்கு 05.07.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொண்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் பின்வருமாறு

| வ. எண் | வேலையின் விவரம் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்த்தாரர்களின் பெயர் | மதிப்பீட் டை விட குறைவு | மதிப்பீட் டை விட அதிகம் |
|---|---|---|---|---|---|
| 1 | பேர்ணாம்பட்டு நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்தில் அமைந்துள்ள கிணறுகளின் வெள்ளத்தினால் சேதமடைந்த பைப்புகள் மற்றும் கேபிள்கள் மாற்றும் பணி | 3,75 | கே எஸ் வி கன்ஸ்ட்ரக்ஷன் | 0.94% | |
| | | | ஆர்.சுரேஷ்மணி | '– | 1.34% |
| 2 | பேர்ணாம்பட்டு நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள மின்சார அமைப்புகளில் ஏற்படும் பழுதுகளை சரி செய்து புதியதாக உதிரிபாகங்களை மாற்றும் பணி | 1,50 | கே எஸ் வி கன்ஸ்ட்ரக்ஷன் | 0.90% | |
| | | | ஆர்.சுரேஷ்மணி | – | 1,45% |

மேற்படி பணிக்கு வர பெற்றுள்ள ஒப்பந்தப் புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக அளித்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணிஉத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**: மன்றம் அனுமதி வழங்கலாம்,

**ந.க எண்** : 842/2022/இ1.

தீர்மானம் எண்.117

அனுமதிக்கப்படுகிறது.

பொருள் எண்.76

இந்நகராட்சி பகுதகளில் டெங்கு கொசு ஒழிப்பு பனி மேற்க்கொள்ளும் பணியாளர்கள் மொத்தம் 43 எண்ணிக்கை பணியாளர்களை பயன்படுத்திக்கொள்ள வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் ந.க.எண்.7220/ஆ2 /நாள்27.06.2021 கடிதத்தில் அனுமதிக்கப்பட்டது மேலும் 2021–2022ம் ஆண்டிற்க்கான ஊதிய விகிதம் வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடித எண் இ2/5227/2021 நாள்07.06.2021 படி மஸ்தூர் பணியாளர்களுக்கு நாள் ஒன்றிற்கு ரூ 304/–என நிர்ணயம் செய்யப்பட்டதின் படி மாதம் ஒன்றிற்கு ரூ3,92,160/– விதம் ஜனவரி–2022, பிப்ரவரி–2022 மற்றும் மார்ச்–2022. ஆகிய 3 மாதங்களுக்கு தோராய செலவுத்தொகை ரூ 12,00,000/–பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற தீர்மானம் எண் 8/24.01.2022 படி நகரமன்றம் தீர்மானம் வழங்கப்பட்டது.

தற்பொழுது 01.04.2022ம் தேதி முதல் 31.07.2022ம் தேதி வரை 4 மாத காலத்திற்கு தொகை ரூ.16,00,000/– ஆகும் செலவினத்தை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கும் அதற்காகும் செலவினத்திற்கும் மன்றத்தின் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது

<u>அலுவலக குறிப்பு :–</u>

1. மன்றம் அனுமதிக்கலாம் .
2. வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண்.668/2022/எச்1

தீர்மானம் எண்.118

01.04.2022 முதல் 30.06.2022 வரை செலவு மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கப்படுகிறது.

பொருள் எண்.77

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தலின்படி தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சிகளில் நகர தூய்மைக்கான விழிப்புணர்வு பேரணி துவக்கி வைக்கப்பட உள்ளது.

நகர தூய்மைக்கான 6 கருப்பொருள்கள் முன்னேற்று செயல்பட உள்ளன பேரணிகளில் நகராட்சிகளில், மாண்புமிகு அமைச்சர்கள் அல்லது சட்டமன்ற உறுப்பினர்கள் பங்கு பெறுவதற்கான உறுதிசெய்து, நகர மன்ற தலைவர் துணைத் தலைவர் மற்றும் கவுன்சிலர்கள் பங்கு பெற அறிவுறுத்தப்படுகிறது.

<u>**பேரணிக்கான ஆயத்தம் அனைத்தும் தமிழ் மொழியை முன்னின்று நடத்தப்பட வேண்டும்.**</u>

1. உறுதிமொழி
2. சைக்கிள் பேரணி
3. டி–ஷர்ட் மற்றும் தொப்பிகளில் லோகோ மற்றும் என் குப்பை என் பொறுப்பு வாசகம் அச்சிடப்பட வேண்டும்.
4. பேரணிக்கு சுத்தம் செய்ய தேவையான அனைத்து உபகரணங்களும் தயார் நிலையில் வைத்துக்கொள்ளவேண்டும்.
5. நீர் நிலைகளை சுத்தம் செய்ய அதற்கு தேவையான வாகனங்களை ஏற்பாடு

செய்ய வேண்டும்

6. நகர சுத்தத்திற்கான பேரணியில் பங்கு பெற உள்ள அனைவர்களுக்கும் அவர்களுக்கு தேவையான சேகரிப்பு உபகரணம் கொடுக்கப்பட வேண்டும்
7. தன்னார்வலர்கள், தொண்டர்கள் அறிந்து வைத்து இப்பேரணியில் ஈடுபடுத்தப்பட வேண்டும்

இவ்வாறு செய்வதன் மூலம் மக்களுக்கு நமது நகரத்தின் சுற்றுச்சூழல் பாதுகாப்பையும், சுகாதாரத்தையும் பேணிக் காப்பதன் முக்கியத்தை உணர்த்தலாம். தொடர்ந்து இதுபோன்று விழிப்புணர்வு மேற்கொள்வதன் மூலம் கூடிய விரைவில் நமது நகர் முழுவதும் தூய்மை நகரத்திற்கான தரத்தை அடைய முடியும்.

**" என் குப்பை, என் பொறுப்பு"** என்று இது போன்று வாசகங்கள் அமைத்து விழிப்புணர்வு ஏற்படுத்த ஆகும் தோராய செலவு தொகை ரூ 1,50,000/- செலவினத்தை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கும் அதற்காகும் செலவினத்திற்கும் மன்றத்தின் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது

**அலுவலக குறிப்பு :-**

1. மன்றம் அனுமதிக்கலாம் .
2. தூய்மை இந்தியா திட்ட நிதியிலிருந்து (SBM) செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண்.768/2022/எச்1

தீர்மானம் எண்.119

அனுமதிக்கப்படுகிறது.

பொருள் எண்.78

இந்நகராட்சி பகுதகளில் 10.07.2022-ம் தேதி பக்ரீத் பண்டிகை கொண்டாட இருப்பதால் பண்டிகை தினத்தன்று ஆடு மற்றும் மாடு ஆகியவற்றினை அறுப்பதால் ஆடு மற்றும் மாடு கழிவுகளை உடனுக்குடன் அப்புறப்படுத்த வேண்டியுள்ளதால் ஐந்து நாட்களுக்கு தனியார் மையம் மூலம் மூன்று டிராக்டர்களை வாடகைக்கு பயன்படுத்த ஆகும் தோராய செலவு தொகை ரூ.1,00,000/-க்கு ஆகும் செலவினத்தை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கும் அதற்காகும் செலவினத்திற்கும் மன்றத்தின் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது

**அலுவலக குறிப்பு :-**

1. மன்றம் அனுமதிக்கலாம் .
2. வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண்.669/2022/எச்1

தீர்மானம் எண்.120

அனுமதிக்கப்படுகிறது.

பொருள் எண்.79

இந்நகராட்சி பொதுசுகதரப் பிரிவுக்கு 2022-202 ம் ஆண்டிற்கு தேவையான சுண்ணாம்பு தூள், மற்றும் பிளிச்சிங்பவுடர் வாங்க ஆகும் தோராய செலவினம் ரூ **5,00,000/-**க்கு பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது

**அலுவலக குறிப்பு :-**

1. மன்றம் அனுமதிக்கலாம் .
2. வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண்.670/2022/எச்1

தீர்மானம் எண்.121

அனுமதிக்கப்படுகிறது.

பொருள் எண்.80

இந்நகராட்சி பொதுசுகதரப் பிரிவில் பணிபுரியும் தூய்மை பணியாளர்கள் தினசரி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தினந்தோறும் வீடு வீடாக சென்று மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என தரம் பிரித்து தூய்மைப்பணி செய்ய வேண்டி இருப்பதால் ரப்பர் கையுறை வாங்கி வழங்க வேண்டியுள்ளதால் வாங்க ஆகும் தோராய செலவினம் ரூ **1,00,000**/-க்கு பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது

**<u>அலுவலக குறிப்பு :-</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம் .
2. வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண்.671/2022/எச்1

தீர்மானம் எண்.122

அனுமதிக்கப்படுகிறது.

பொருள் எண்.81

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் தூய்மை இந்திய திட்டத்தின் கீழ் மக்கும் குப்பை மக்காத குப்பை என தரம் பிரித்து வாங்கும் பணிகள் நடைபெற்று வருகிறது குப்பைகளை பிரித்து வாங்க 17-BOV வாகனங்கள் இருக்கிறது தற்சமயம் சிறு சிறு பழுதுகள் ஏற்படுவதினால் வருடாந்திர பராமரிப்பு பணிகள் செய்ய மன்றத்தின் அனுமதிக்கும் அதற்காகும் செலவினத்திற்கும் மன்றத்தின் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது

**<u>அலுவலக குறிப்பு :-</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம் .
2. வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண்.672/2022/எச்1

தீர்மானம் எண்.123

அனுமதிக்கப்படுகிறது.

பொருள் எண்.82

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் தூய்மை இந்திய திட்டத்தின் கீழ் மக்கும் குப்பை மக்காத குப்பை என தரம் பிரித்து வாங்கும் பணிகள் நடைபெற்று வருகிறது குப்பைகளை பிரித்து வாங்க 17-BOV வாகனங்கள் இருக்கிறது தற்சமயம் 5-BOV வாகனங்கள் பயன்படுத்த முடியாமல் பழுதடைந்துள்ளது எனவே புதிய BOV வாகனங்கள் வாங்கி வழங்க அனுமதிக்கும் அதற்காகும் செலவினத்திற்கும் மன்றத்தின் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது

**<u>அலுவலக குறிப்பு :-</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம் .
2. தூய்மை இந்தியா திட்டம்-2.0 (SBM-2.0) நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண்.672/2022/எச்1

தீர்மானம் எண்.124

அனுமதிக்கப்படுகிறது.

பொருள் எண்.83

இந்நகராட்சி அலுவலக சில்லறை செலவினம் மேற்கொள்ள 2022-2023 ஆண்டிற்கு பொதுபிரிவு, பொறியியல்பிரிவு மற்றும் பொதுசுகாதாரப்பிரிவு ஆகிய பிரிவுகளுக்கு பிரிவு ஒன்றுக்கு ரூ5,000/-விதம் மூன்று பிரிவுகளுக்கு ரூ15,000/-ஐ முன்பணமாக பெற்று செலவுகள் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது

**அலுவலக குறிப்பு :–**

1. மன்றம் அனுமதிக்கலாம் .
2. வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்

**ந.க.எண்.673/2022/எச்1**

**தீர்மானம் எண்.125**

அனுமதிக்கப்படுகிறது.

(ஒம்./-) வெ.பிரேமா,
நகர்மன்ற தலைவர்,
பேர்ணாம்பட்டு நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர்,
பேர்ணாம்பட்டு நகராட்சி

## நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

விடுநர்
த.வ.சுபாஷினி, எம்.ஏ.,
நகராட்சி ஆணையாளர்,
பேர்ணாம்பட்டு நகராட்சி,
பேர்ணாம்பட்டு.

பெறுநர்
1. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகர் நிர்வாக அலுவலக வளாகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை,
எம்.ஆர்.சி.நகர், சென்னை–28.

2. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,
நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரகம்,
வேலூர்–12.

ந.க.எண்.89/2022/டி1 நாள் : 05.08.2022

ஐயா/அம்மையீர்,

பொருள் : மன்றப் பொருள் – பேர்ணாம்பட்டு நகராட்சி – ஜீலை மாதத்தின் சாதாரணக் நகர்மன்ற கூட்டம் 30.07.2022ம் தேதி நடைப்பெற்றது –அறிக்கை அனுப்பி வைத்தல் – தொடர்பாக.

பார்வை : நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களின் கடிதம் 1608/2022/அ1, நாட்ள.19.07.2022.

*****

பார்வையில் காணும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர்–12 அவர்கள் கடிதத்தின்படி, இந்நகராட்சியில் நடைப்பெற்ற ஜீலை மாதத்தின் சாதாரணக் நகர்மன்ற கூட்டம் 30.07.2022 அன்று நடைப்பெற்றது. இக்கூட்டத்தில் நடைப்பெற்ற கூட்டப்பொருள்கள் மற்றும் தீர்மானம் அறிக்கையினை இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது என்பதனை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆணையாளர்,
பேர்ணாம்பட்டு நகராட்சி.

இணைப்பு :
மேற்கண்டவாறு